WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 06
THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:05 | 06.11.2023 திங்கட்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# யாழ்ப்பாணத்தில் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வமாக வியஜம் செய்த இலங்கைக்கான சீன தூதுவர் கி சென் ஹொங் தலைமையிலான குழுவினர் இன்று யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்து நலத் திட்டங்கள் பலவற்றைத் தொடக்கி வைத்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் சீன அரசின் உலர் உணவுப் பொதிகளை யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கி வைத்தனர். யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்ற வைபவத்தில் சீன அரசினால் 5000 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாணம் நெடுந்தீவு மக்களுக்கு 500 பொதிகள் வழங்கப்பட்டன. இதேபோன்று மாவட்டத்தின் பல இடங்களிலும் அடுத்த கட்டங்களாக உலர் உணவுப்பொதிகளை தூதுவரே நேரடியாக வழங்கி வைக்க உள்ளார். சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண பழைய கச்சேரி கட்டடத்தொகுதியைப் பார்வையிட்டனர்.

(பக்:02)




# கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார் அலிசப்ரி ரஹீம்

பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.



கட்சியின் ஒழுக்காற்றுக் குழு நடத்திய தொடர்ச்சியான விசாரணையின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மீது கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம்....

(பக்:02)

# பல்கலைக்கழக மாணவர்கள் பிணையில் விடுதலை

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரை காணிகள் அபகரிப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தின் பின்னர் சந்திவெளியில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை மேலதிக நீதவான் அன்வர் சதாத் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

நீதிமன்ற எல்லைக்குட்பட்ட வதிவிடத்தைக் கொண்ட ஆள் சரீரப்பிணையில் அவர்களை எடுப்பதற்கு தேசிய அடையாள அட்டையை கிராமசேவகர் உறுதிப்படுத்திய ஆவணங்களை நீதிமன்றில் நேற்றைய தினம் ஒப்படைக்க தாமதமான நிலையில் அவர்களை சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் கையளித்ததையடுத்து அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களை ஆள்பிணையில் எடுப்பவர்கள் ஆவணங்களுடன் சிறைச்சாலைக்கு சென்று வழங்கியதன் பின்னர் இன்று விடுவிக்கப்பட்டனர்.

# யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நண்பகல் 11:30 மணியளவில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ஊடக சீனத் தூதுவர் கி சென்ஹொங் சக்கோட்டை முனைக்குச் சென்று பார்வையிட்டார். இது அவரது இரண்டாவது விஜயமாகும்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் ரூபா 6,500 படி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சீனத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்துக்கான நிகழ்ச்சி நிரலில் யாழ். பல்கலைக்கழக விஜயம் தவிர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

# கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்பட்டது. அவரது பதவி விலகல் கடிதம் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீ முல்லாவுக்கும் அலிசப்ரி ரஹீமுக்கும் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடிதத்தைப் பொறுப்பேற்றுள்ள முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லா, உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளளார் தவிசாளர் எம்.எச்.எச்.அமீர் தெரிவித்தார்.




# கலைக்கப்பட்டது இலங்கை கிரிக்கெட் சபை

உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை கிரிக்கெட் அணி மிக மோசமாகத் தோல்வியடைந்ததால் தற்போதைய கிரிக்கெட் நிர்வாக சபையை இடைநிறுத்தி இலங்கை கிரிக்கெட்டுக்கான ஏழு பேர் கொண்ட இடைக்கால குழுவை நியமிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவு செய்துள்ளார்.

இந்த இடைக்காலக் குழுவின் தலைவராக *1996* ஆம் ஆண்டு இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற அர்ஜுன ரணதுங்க, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளான எஸ்.ஐ. இமாம்,ரோஹினி மாரசிங்க, ஐரங்கனி பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இடைக்கால குழுவின் உறுப்பினர்களாக உபாலி தர்மதாச, ரகித ராஜபக்ஷ, ஹிஷாம் ஜமால்தீன் ஆகியோரை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் போட்டித் தோல்விகளுக்கு தெரிவுக்குழுவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனமும் பொறுப்பேற்று உரிய அதிகாரிகள் தமது பதவிகளை நீக்கம் செய்ய வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் கடந்த 3 ஆம் திகதி கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலநடுக்கத்தால் வீடு இன்றி தவிக்கும் 2 லட்சம் மக்கள்

நேபாளத்தில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 2 லட்சம் பேர் வீடின்றி பரிதவிக்கின்றனர். அவர்கள் கடும் குளிரில் திறந்தவெளியில் தூங்குகின்றனர்.

நேபாளத்தின் கர்னாலி மாகாணம் ஜாஜர்கோட் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் ஜாஜர்கோட், கிழக்கு ரூகம் மாவட்டங்களில் பேரழிவு ஏற்பட்டது. இதுவரை 157 பேர் உயிரிழந்துள்ளனர். 400க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இரு மாவட்டங்களிலும் பெரும்பாலான வீடுகள், கட்டடங்கள் இடிந்துள்ளன.

நிலநடுக்கம் நேரிட்ட பகுதிகளில் இதுவரை 159 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டு உள்ளன. இதனால் பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு செல்ல மக்கள் அஞ்சுகின்றனர். சுமார் 2 லட்சம் பேர் வீடு, உடைமைகளை இழந்து திறந்த வெளியில் பரிதவிக்கின்றனர். நேபாளத்தில் குளிர்காலம் தொடங்கியுள்ளது. கடும் குளிரை பொருட்படுத்தாமல் கடந்த சனிக்கிழமை ஜாஜர்கோட், கிழக்கு ரூகம் மாவட்ட மக்கள் திறந்த வெளியில் தூங்கினர். வீடுகளை இழந்த மக்களுக்காக நேபாள அரசு சார்பில் ஆங்காங்கே தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. ஆனால் இவை போதுமானதாக இல்லை. இது தொடர்பாக ஜாஜர்கோட் மாவட்டம் பெரி பகுதியைச் சேர்ந்த ஊர் மிளாராவத் கூறும் போது, “நிலநடுக்கத்தால் எங்களது குடும்பத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீடு, உடைமைகளை முழுமையாக இழந்து விட்டேன். இப்போது ஆதரவின்றி தெருவில் நிற்கிறேன். தூங்குவதற்குகூட இடமில்லை” என்றார்.

## கன்னத்தில் முத்தமிட்ட அமைச்சர்

ஜேர்மனியின் தலைநகரமான பெர்லின் நகரில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைச்சர்களுக்கான சந்திப்பு நடைபெற்றது. அச்சந்திப்பில் பல ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்டனர். 65 வயதான குரோஷியா நாட்டைச்சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர் கோர்டன் க்ரிலிக்-ராட்மேன் இச்சந்திப்பில் பங்கு பெற்றார். அப்போது அனைத்து அமைச்சர்களும் ஒன்றாக இணைந்து புகைப்படம் எடுத்துக்கொள்ளும் சம்பிரதாய நிகழ்வு நடைபெற்றது. ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் அன்னாலினா பேர்பாக் அந்த நிகழ்வில் கலந்து கொண்டு அனைவருடன் குழுவில் நின்றார். அப்போது எதிர்பாராத விதமாக அன்னாலினா அருகில் நின்று கொண்டிருந்த ராட்மேன், அன்னாலினாவை கன்னத்தில் முத்தமிட்டார். அன்னாலினா மென்மையாக ராட்மேனின் இந்தச் செய்கையைத் தவிர்த்தார்.பலரையும் இந்தச் செயல் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்தச் சம்பவத்தின் வீடியோ இணையத்தில் பரவி பரபரப்பானது.



## காஸாவுக்கு 48 மணி நேரகெடு

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. காஸாவில் இஸ்ரேலியப் படைகள் இடைவிடாது தாக்குதல் நடத்துவதால் அங்கு மீண்டும் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஒரே மாதத்தில் 3 ஆவது முறையாக இவ்வாறு தொலைத்தொடர்பு அங்கு முடக்கப்பட்டுள்ளது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காஸாவில் அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். இஸ்ரேல்இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி செய்தியாளர்களை சந்தித்த போது, “காஸாவில் வடக்கு, தெற்கு எல்லாம் இப்போது இல்லை. மொத்த காஸாவும் இரண்டாகப் பிரிந்துள்ளது. நாங்கள் காஸாவை சூழ்ந்து விட்டோம். இன்னும் 48 மணி நேரம் தான் காஸா நகருக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துவிடும்” என்று எச்சரித்துள்ளார்.



## மேற்கு கடற்கரைக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திடீர் விஜயம்

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிளிங்கன் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்கு கரைப்பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை திடீர் விஜயம் செய்தார். பின்னர் அவர் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது காஸாப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலைகள் குறித்து அப்பாஸ், பிளிங்கனிடம் விவரித்தார். இந்த நிலையில் காஸாவில் வசிக்கும் மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்படக்கூடாது என்று அமெரிக்க அமைச்சர் பிளிங்கன், பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸிடம் தெரிவித்தார். மேலும் இருவரும் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அதித வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதித்தனர் என்று அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத் திவ் மில்லர் தெரிவித்தார்.



# பயணிகளுக்குப் பரிசு வழங்கிய துபாய்

துபாய் சாலை மற்றும் போக்குவரத்து ஆணையத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் பொதுப்போக்குவரத்து தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 14ஆவது ஆண்டாக கடந்த 1 ஆம்திகதி ‘உங்கள்வழியில் விளையாட்டுக்கள்’ என்ற கருப்பொருளில் கொண்டாடப்பட்டது. இதேநாளில் சாலை மற்றும் போக்குவரத்து தொடங்கிய 18 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டமும் நடந்தது. துபாயில் சாலை மற்றும் போக்குவரத்து ஆணையத்தின் சார்பில் பஸ், மெட்ரோரெயில், டிராம், படகு, டாக்சி உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகள் இயக்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் பொதுப்போக்குவரத்துச் சேவையை அதிக முறை பயன்படுத்திய தலா 3 பேர் பரிசுகள் வழங்கி கௌரவிக்க தேர்வு செய்யப்பட்டனர்.மாற்றுத்திறனாளிகள் பிரி வில் 8 ஆயிரம் முறை AG பயணம் செய்த டெர்ரன் பாடியா முதல் பரிசையும், 7 ஆயிரம் முறை பயணம் செய்த சலேம் அல் சமகி 2 ஆம் இடத்தையும், 6 ஆயிரத்து 750 முறை பயணம் செய்த முகம்மது அப்தெல் காதர் 3 ஆம் இடத்தையும் பிடித்தனர். பொதுப் பிரிவில்15 ஆயிரத்து 900 முறை பயணம் செய்த முகம்மது அபுபக்கர் முதல் பரிசையும், 14 ஆயிரத்து 422 முறை பயணம் செய்த முகம்மது அகமது ஜதா 2 ஆம் பரிசையும், 13 ஆயிரத்து 900 முறை பயணம் செய்த சிராஜ் அல் தின் அப்தெல் காதர் 3 ஆவது பரிசையும் பெற்றனர். முதல் பரிசு பெற்றவர்களுக்கு 10 லட்சம் நோல் பாய்ண்டுகளும், 2 ஆவது பரிசு பெற்றவர்களுக்கு 7 லட்சம் நோல் பாய்ண்டுகளும் 3 ஆவது பரிசு பெற்றவர்களுக்கு 5 லட்சம் நோல் பாய்ண்டுகளும் வழங்கப்பட்டது.

# பிரான்ஸில் யூத விரோத செயல் அதிகரிப்பு

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுததாரிகள் நடத்திய கொடிய தாக்குதலுக்குப் பிறகு பிரான்ஸ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட யூத விரோத செயல்களை பதிவு செய்துள்ளது என்று உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மானின் ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தார். 102 வெளிநாட்டவர்கள் உட்பட 486 பேர் அத்தகைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸின் யூத மக்கள் தொகை, 500,000 க்கும் அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது ஐரோப்பாவில் மிகப்பெரியது மற்றும் இஸ்ரேல், அமெரிக்காவிற்குப் பிறகு உலகில் மூன்றாவது பெரியது.

பாரிஸ் மட்டும் 257 யூத விரோதச் செயல்கள் நடந்ததாகவும், 90 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பாரிஸ் காவல் துறைத் தலைவர் லாரன்ட் நுனேஸ் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# வரவு இல்லாத செலவுத்திட்டம்

வரவு செலவுத்திட்டம் நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டால் அதற்கென ஒரு எதிர்பார்ப்பு ஒரு காலத்தில் இருந்தது. பொருட்களின் விலை அதிகரிப்புத்தான் வரவு செலவுத்திட்டம் என ஒரு காலத்தில் கணிக்கப்பட்டது. வரவு செலவுத்திட்டத்துக்கு முன்னர் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டன. இப்போது மாதாந்தம் விலை அதிகரிக்கப்படுவதால் வரவு செலவுத்திட்டத்தைப் பற்றி மக்கள் அதிகம் கவலைப்படுவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்டம் என்பதால் ஓரளவு எதிர்பார்ப்பு உள்ளது. தேர்தல் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் பாரம் பரியத்தைக் கடைப்பிடிக்கும் வாய்ப்புகள் உள்ளன. அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தேர்தலுக்கு முன்னரான அறிவிப்பாக இருக்கலாம், தனியார்துறையின் சம்பள உயர்வுக்கு நிதி அமைச்சர் என்ன சொல்லப் போகிறார்? எனத் தெரியவில்லை.

கடன் கொடுப்பவர்களின் கிடுக்கிப்பிடி ஒருபுறம் இருக்கிறது. அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் பணிச்சுமையும் நிதி அமைச்சருக்கு உள்ளது. அதேவேளை, மக்களையும் திருப்திப்படுத்த வேண்டும்.

நிதியமைச்சராக இருக்கும் ஜனாதிபதி, பொதுத்துறை நிறுவனங்களின் சம்பள உயர்வு குறித்து ஏற்கெனவே சூசகமாகக் கூறியிருந்தாலும், அதற்கான பணத்தை எங்கிருந்து தேடப் போகிறார் என்பதுதான் பில்லியன் டொலர் கேள்வி. ஏற்கெனவே மாநிலத் துறை சம்பளங்கள் வரி வருவாயில் 55% சாப்பிடுகின்றன மற்றும் GDP வளர்ச்சி இன்னும் சிவப்பு நிலையில் உள்ளது மற்றும் சமீபத்திய வரி உயர்வைத் தொடர்ந்து அது அப்படியே இருக்கும்.

இலங்கை தனக்காக உருவாக்கிய குழப்பத்தில் இருந்து வெளிவர வேண்டுமானால், தீர்வு எளிமையானதாக இருக்க வேண்டும். இந்த தேசத்தின் எதிர்காலத்தைத் தின்றுவிட்டு, ஆட்சியின் ஒவ்வொரு அங்கத்திலும் பரவியிருக்கும் அழுக்கைச் சுத்தம் செய்ய குறைந்தபட்சம் இப்போதாவது உறுதியளிக்க வேண்டும். ஊழலை வேரறுப்பது நிகழ்ச்சி நிரலில் முதன்மையானதாக இருக்க வேண்டும். 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமானது அதற்குத் தேவையான ஆதாரங்களை ஒதுக்குவதன் மூலம் அந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு சிறந்த இடமாகும். ஊழல் இல்லாத ஆட்சியை அமைக்கப்போவதாக உறுதியளித்த அரசியல் தலைவர்கள் ஆட்சி அதிகாரத்தில் அமர்கின்றனர். ஆட்சிபீடம் ஏறியதும் வாக்குறுதிகளை வசதியாக மறந்து விடுகின்றனர். அரசாங்கத்தின் கொள்கைகள் வேறாக இருந்தாலும் ஊழலை ஒழித்துக் கட்டுவதில் ஒரேகுரலை வெளிப்படுத்த வேண்டும்.

சிங்கப்பூரின் வெற்றியானது ஊழலைப் பொறுத்துக் கொள்ளாததுதான். யார் ஆட்சிக்கு வந்தாலும் அந்த அடிப்படைக் கொள்கையில் இருந்து விலகாததால் சிங்கப்பூர் சிங்கப்பூராகவே தொடர்கிறது. ஊழல் அரசியல்வாதிகளால் திட்டமிடப்பட்ட ஒப்பனை வளர்ச்சிக்கு அப்பால் ஸ்ரீலங்கா முன்னேறி, இந்த நாட்டை மீண்டும் நிலையான மற்றும் நீடித்த மீட்சிக்கான பாதையில் கொண்டு செல்ல வேண்டுமானால், சிங்கப்பூரின் முன்மாதிரியைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தத் தேசத்தின் துரதிஷ்டம் என்னவென்றால், அதன் தலைவர்கள் எவருக்கும் - கடந்த காலமோ அல்லது நிகழ்காலமோ, இந்தத் தேசத்தை அந்தப் பாதையில் கொண்டு செல்ல விருப்பம் இல்லை, வெறும் உதட்டளவில் தங்கள் உறுதிப்பாட்டை மட்டுப்படுத்த விரும்புகிறது.

# திறமை மிக்க அபிவிருத்தி இல்ல சிறுவர்கள்



கிழக்கு மாகாணத்திலுள்ள 51 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் 1204 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இது தவிர அரச பாதுகாப்பு 4 இல்லங்களில் 45 பிள்ளைகளும் பராமரிக்கப்படுவதாக கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வானி றிபாஸ் தெரிவித்தார். உலக சிறுவர் தினத்தையொட்டி "எல்லாவற்றையும்விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண மட்ட சிறுவர் தின வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் விளையாட்டு, கலை, கலாசார மற்றும் மேடை நாடகம், பேச்சு, பாடல், இசை போன்ற பல்வேறுபட்ட திறன்கொண்டவர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# உலக சாதனை படைத்த 2 வயது சிறுவன்




பலாங்கொடையில் வசித்துவரும் ராஜீவ்காந்தி ரொஷானி தம்பதிகளின் மகனான ஆரோன் சாத்விக் என்ற 2 வயது 11 மாதங்கள் ஆன சிறுவன் 100 மீற்றர் தூரத்தை 30 நொடிகளில் ஓடி முடித்து சோழன் உலக சாதனை படைத்தார்.

பலாங்கொடை பெரிய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சாதனை ஓட்டத்துக்கு சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாக வாணி ராஜா, இரத்தினபுரி மாவட்டத் தலைவர் பிரவீனா பாரதி, நுவரெலியா மாவட்டத் தலைவர் சாம் பசிவம் சதீஷ்குமார் ஆகியோர் கண்காணித்து உறுதி செய்தனர்.

# யாழ்ப்பாணத்தில் விடுதியில் இருந்தவர் மரணம்



யாழ்ப்பாண வைத்தியசாலை வீதியில் கொட்டடிப் பகுதியில் உள்ள விடுதியில் மூன்று நாட்களாகத் தங்க இருந்தவர் பெரேரா என்கிற 61 வயதுடைய தென்னிலங்கையைச் சேர்ந்தவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு அறைக்கு வெளியே அவர் உயிரிழந்ததாக விடுதி உரிமையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

# அமெரிக்க குடியுரிமையை கைவிடும் பசில்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க குடியுரிமையை கைவிடுமாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் கட்சி, தேசிய மக்கள் சக்தி கட்சி ஆகியன தமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துள்ளன. ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்காதது அரசியல் ரீதியாக பாதகமானது என மூத்த தலைவர்கள் அவரிடம் தெரிவித்துள்ளனர்.

முதிர்ந்த அரசியல்வாதியாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் நிதியமைச்சராகவும் கடமையாற்றிய பசில் ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலுக்கு பொருத்தமான வேட்பாளர் பசில் ராஜபக்ஷ கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு பசில் ராஜபக்ஷவிடம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று தடவைகள் கேட்டுக் கொண்டதாகவும் ஆனால் வியத்மக போன்ற அமைப்புக்களின் வேண்டுகோளுக்கமைய, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாய ராஜபக்ஷவுக்கு வேட்பு மனு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிறுவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம்

இலங்கையில் சிறுவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக சர்வதேச சுகாதார விஞ்ஞானப் பிரிவின் போசாக்கு அலகு பிரதானி வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மாணவ மாணவியர் சந்தையில் விற்பனை செய்யப்படும் முறுக்கு, வடை, ரோல்ஸ், பெட்டிஸ், டோனட், கேக் உள்ளிட்ட உணவு வகைகளை உட்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனி, எண்ணெய் போன்றன அதிகளவில் செறிவான உணவுப்பொருட்களை உட்கொள்வதனால் சிறு வயதிலேயே பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பிள்ளைகள் எண்ணெய், சீனி செறிந்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும் எனவும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# மின்கட்டணம் செலுத்தாத அரசியல்வாதிகள்

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமல் 50 அரசியல்வாதிகள் ஏமாற்றி வருவதாகவும், அரசியல்வாதி ஒருவர் தென் மாகாணத்தில் வெசாக் பண்டிகையை நடத்தி 11 லட்சம் ரூபாவை மின்சார சபைக்கு வழங்காமல் ஏமாற்றியுள்ளதாகவும் இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

அரசியல் வாதிகளின் மோசடி தொடர்பான விபரங்கள் மக்கள் முன்னிலையில் அம்பலப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தீபாவளியை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டி



கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தீபாவளித் திருநாளை முன்னிட்டு கண்டி மாவட்டத்திலுள்ள தோட்டப்புற மக்களுக்கு உலருணப் பொதிகள் வழங்குதல், தீபாவளிப் பண்டிகையின் தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி ஆகியன கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் தலைவர் பி.குமாரதாஸ் தலைமையில் இடம்பெற்றது. கலஹா, தெல் தோட்டை, பன்விலை ஹந்தானை உள்ளிட்ட போன்ற தோட்டப்புறப் பகுதியிலுள்ள 750 குடும்பங்களுக்கு ரூபா 5000 பெறுமதியான உலருவுணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை, கிரிக்கெட் சுற்றுப் போட்டி, பலூன் உடைத்தல், போன்ற பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார், தொழிலதிபர் எஸ்.முத்தையா, பெ.பழனியப்பன், தொழிலதிபர் மூர்த்தி, மலையக கலைசார சங்கத்தின் தலைவர் எஸ்.பரமேஸ்வரன்ஆகியோர் கலந்துகொண்டனர்.

# எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்கும் எண்ணம் இல்லை

## சந்திரிக்கா பண்டாரநாயக்க

தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் விசேட பதவியொன்றை கோரியுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களை நிராகரித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க எந்தக் கட்சிக்கும் ஆதரவளிப்பது குறித்து தீர்மானிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

அனுர பண்டாரநாயக்க ஞாபகார்த்த மன்றம் ஏற்பாடு செய்திருந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளிற்கு புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்துல் கலந்துகொண்டபோது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்க தீர்மானிக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரே என்னிடம் வந்து எனது ஆதரவிற்கு மன்றாடினார் எனினும் நான் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்க தீர்மானிக்கவில்லை என தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுடனும் பல கட்சிகளுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதாகக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சரதி துஸ்மந்த தெரிவித்துள்ளார்.



# தென் ஆபிரிக்காவை தெறிக்கவிட்ட இந்தியா

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற 37 ஆவது லீக் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக விளையாடிய இந்தியா 243 ஓட்டங்களால் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 326 ஓட்டங்கள் எடுத்தது. 27.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த தென் ஆபிரிக்கா 83 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

பவர் பிளே ஓவர்களில் அதிரடியாக விளையாடி 62 ஓட்டங்கள் இணைப்பாடமாக எடுத்த ரோஹித் சர்மா 40 ஓட்டங்களிலும் ப்மன் கில்லும் 23 ஓட்டங்களிலும் ஆட்மிழந்தனர்.

3 ஆவது விக்கெட்டில்இணைந்த கோலி, ஸ்ரேயாஸ் ஐயர் ஜோடி 134 ஓட்டங்கள் எடுத்து அசத்தியது. ஸ்ரேயாஸ் ஐயர் 77, கே.எல். ராகுல் 8, சூரியகுமார் யாதவ் 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இருப்பினும் மறுபுறம் தொடர்ந்து சிறப்பாக விளையாடிய விராட் கோலி 10 பவுண்டரியுடன் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்கள் அடித்தார். ரவீந்திர ஜடேஜா 3 பவுண்டரி 1 சிக்ஸருடன் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்கள் அடித்தார்.




327 என்ற கடினமான இலக்கைத் துரத்திய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பத்திலேயே சிராஜ் வேகத்தில் டீ காக் 5 ஓட்டங்களில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். யான்சென் அதிகபட்சமாக 14 ஓட்டங்கள் எடுத்தார்.

27.1 ஓவரில் தென்னாபிரிக்காவை 83 ஓட்டங்களுக்கு சுருட்டிய இந்தியா 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மெகா வெற்றி பெற்றது. ரவீந்திர ஜடேஜா 5, ஷமி,குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

உலகக்கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா சாதனை படைத்துள்ளது. 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் மெல்பேர்ன் நகரில் இந்தியா 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை தோற்கடித்தது.




6 பவுண்டரி 2 சிக்ஸருடன் 40 ஓட்டங்கள் அடித்த ரோஹித் சர்மா 4.3 ஓவரில் இந்தியாவை 50 ஓட்டங்கள் தாண்ட உதவினார். இந்த 2 சிக்ஸர்களையும் சேர்த்து இந்த வருடம் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட்டில் ரோஹித் சர்மா மொத்தம் 58 சிக்ஸர்கள் அடித்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரு காலண்டர் வருடத்தில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற ஏ.பி.டீ.வில்லியர்ஸ் உலக சாதனையை ரோகித் சர்மா சமன் செய்துள்ளார்.

1. ரோஹித் சர்மா : 58 (2023) 1. ஏபி டீ வில்லியர்ஸ் : 58 (2015)
2. கிறிஸ் கெயில் : 56 (2019)
3. ஷாஹித் அப்ரிடி : 48 (2002)

இந்திய அணி சார்பாக துவக்க வீரர்களாக களம் இறங்கிய ரோகித் சர்மா மற்றும் சுப்மன் கில் ஆகியோர் இணைந்து கடந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய அணி சார்பாக மாபெரும் சாதனையென்றினை நிகழ்த்தி அசத்தியுள்ளனர். இந்திய அணியின் துவக்க வீரர்களாக களம் இறங்கி ஒரே ஆண்டில் அதிக பட்ச ரன்களை அடித்த துவக்க ஜோடி என்ற சாதனையை இவர்கள் படைத்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு மட்டும் ரோஹித் சர்மா, சுப்மன் கில் ஆகியோர் ஜோடியாக 2019 ஓட்டங்களைக் குவித்துள்ளனர். 1998 ஆம் ஆண்டு ஒருநாள் கிரிக்கெட்டில் 2002 ஓட்டங்கள் அடிக்கப்பட்டது.

**பிறந்தநாளன்று சதம் விளாசிய கோலி**

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் பிறந்த நாளன்று சதம் விளாசிய 7 ஆவது என்ற சாதனையைக் கோலி படைத்துள்ளார். இதுவரை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய அணி முன்னாள் வீரர் வினோத் காம்ப்ளி தனது 21 ஆவது பிறந்தநாளன்று இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் சதம் விளாசியுள்ளார். இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தனது 25 ஆவது பிறந்த நாளன்று அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் சதம் விளாசினார்.

இலங்கை அணியின் சனத் ஜெயசூர்யா தனது 39 ஆவது பிறந்தநாளன்று இந்தியாவுக்கு எதிராகவும் நியூஸ்லாந்து அணியின் ராஸ் டெய்லர்தனது 27 ஆவது பிறந்தநாளன்று பாகிஸ்தானுக்கு எதிராகவும் நியூஸ்லாந்து அணியின் டாம் லேதம் தனது 30 ஆவது பிறந்தநாளன்று நெதர்லாந்துக்கு எதிராகவும் சதம் விளாசியிருக்கின்றனர். பிறந்தநாள் அன்று சதம் விளாசிய தன் மூலமாக ஒருநாள் போட்டிகளில் சச்சின் டெண்டுகரின் 49 சதங்கள் சாதனையை சமன் செய்துள்ளார்.

**ஐ.சி.சியின் ஆட்ட நாயகன்**

50 ஓவர் உலகக்கிண்ணம், ரி20 உலகக்கிண்ணம், சம்பியன்ஸ் டிராபி ஆகிய அனைத்து விதமான ஐ.சி.சி தொடர்களில் மொத்தம் விராட் கோலி 12 ஆட்டநாயகன் விருதுகளை வென்றுள்ளார். இதன் வாயிலாக ஐ.சி.சி தொடர்களில் அதிக ஆட்டநாயகன் விருதுகளை வென்ற வீரர் என்ற கிறிஸ் கெய்ல் சாதனையை உடைத்துள்ள அவர் மற்றுமொரு புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

1. விராட் கோலி : 12
2. கிறிஸ் கெயில் : 11
3. சச்சின் டெண்டுல்கர்/ரோஹித் சர்மா/ஷேன் வாட்சன்/மகலே ஜயவர்த்தன : தலா 10
4. யுவராஜ் சிங்/ ஏ.பி.டீ.வில்லியர்ஸ்/ சனத் ஜயசூர்ய : தலா 9

**ஜடேஜாவின் சாதனைகள்**

9 ஓவர்களில் 1 மெய்டன் உட்பட 33 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுகளை எடுத்து அறிவிக்கப்படாத ஆட்டநாயகனாக அசத்தினார் ஜடேஜா. உலகக்கிண்ண வரலாற்றில் ஒரு போட்டியில் 5 விக்கெட்களை எடுத்த இந்திய சுழல்பந்து வீச்சாளர் என்ற யுவராஜ் சிங் சாதனையை சமன் செய்துள்ளார். கடைசி நேரத்தில் களமிறங்கி ஆட்டமிழக்காமல் 29ஓ (15) ஓட்டங்கள் குவித்து ஒரு போட்டியில் 25 ஓட்டங்கள், 5 விக்கெட்டுகள் எடுத்த இந்திய வீரர் கபில் தேவ், யுவராஜ் சிங் ஆகியோரின் தனித்துவமான சாதனையும் அவர் சமன் செய்துள்ளார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 06.11.2023 அன்று வெளியிடப்பட்டது.